ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2022 ஒத்தோபர் 06 |

# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2022 ஓகத்து

## பொதுநோக்கு

இறக்குமதிச் செலவினமானது 2022 யூலையுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றை பதிவுசெய்த போதிலும் ஆண்டிற்காண்டு அடிப்படையில் தொடர்ச்சியாக ஆறாவது மாதமாக 2022 ஓகத்தில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் கடுமையான பற்றாக்குறைக்கு மத்தியில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு முன்னுரிமையளிக்கும் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு 2022 ஓகத்தில் அரசாங்கம் அவசரமற்ற இறக்குமதிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை இறுக்கமாக்கிய போதிலும் பின்னர் 2022 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் பகுதியளவில் தளர்த்தப்பட்டன. அதேவேளை, ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 ஓகத்தில் அதிகரித்து 2022 ஏப்பிறல் தொடக்கம் அவதானிக்கப்பட்ட அதன் வரவேற்கத்தக்க வளர்ச்சிப் போக்கினைத் தொடர்ந்தன. இதன் விளைவாக, வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கதொரு சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022 யூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் அதிகரித்துக் காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2021இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. 2022 ஓகத்து மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் சிறியளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த அதேவேளையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் சிறியளவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. மத்திய வங்கி அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியிடும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையைத் தொடர்ந்தும் வழங்கியமையினால் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் பயன்படுத்தக்கூடிய மட்டம் குறைவடைந்துள்ளது. அதேவேளை, வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட உடனடிச் செலாவணி வீதமானது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றிற்கு ஏறத்தாழ 361 ரூபாவாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | ஓகத்து 2021 ஐ.அ.டொ.மில் | ஓகத்து 2022 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-ஓகத் 2021 ஐ.அ.டொ.மில் | சன-ஓகத் 2022 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,101 | 1,224 | 11.2 | 7,904 | 8,902 | 12.6 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,687 | 1,486 | -11.9 | 13,411 | 12,801 | -4.6 |
| வர்த்தக மீதி | -586 | -261 | | -5,507 | -3,899 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 13 (ஆ) | 68 (இ) | - | 64 (ஆ) | 893 (இ) | - |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 447 | 325 | -27.2 | 4,224 | 2,215 | -47.6 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (ஈ) | -16 | 3 | | -181 | 97 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (மொத்தம்) | 441 | 62 | | 1,739 | 1,759 | |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் | - | 0.1 | | 16 | 16 | |
| நீண்ட காலக் கடன்கள் | 441 | 62 | | 1,223 | 1,743 | |
| கூட்டுக் கடன்கள் | - | - | | 500 | - | |
| திரண்ட நிலுவை | | | | -2,423 | -3,035 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2021 இற்கான சராசரி தங்கு காலம் மற்றும் நாளொன்றுக்கான சராசரி செலவிடல் மதிப்பீடுகளின் அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) இத் தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது

**இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி:** வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2021 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 586 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் ஐ.அ.டொலர் 261 மில்லியனிற்குச் சுருக்கமடைந்த போதிலும் 2022 யூலையுடன் ஒப்பிடுகையில் விரிவடைந்து காணப்பட்டது. அதேவேளை, ஒன்றுசேர்ந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையும் 2021 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,507 மில்லியனிலிருந்து 2022இன் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,899 மில்லியனிற்குச் சுருக்கமடைந்தது. ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையின் வீழ்ச்சிக்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.

**வர்த்தக மாற்று விகிதம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் 9.0 சதவீதத்தினால் தேய்வடைந்து காணப்பட்டது.

**வரைபடம் 1: 2022 சனவரி – ஓகத்து காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்காண்டு வீழ்ச்சிக்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: 2022 சனவரி – ஓகத்து காலப்பகுதியில் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் துணைத்துறைகளில் ஏற்பட்ட மாற்றம் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2021–2022)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: வர்த்தக மாற்று விகிதம் (2021-2022)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்**[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 ஓகத்திலும் பார்க்க 2022 ஓகத்தில் ஐ.அ.டொலர் 1,224 மில்லியனிற்கு 11.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டிருந்த அதேவேளையில் கனிப்பொருள் ஏற்றுமதிகளில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது. 2022 சனவரி–ஓகத்து வரையிலான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியிலும் பார்க்க 12.6 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 8,902 மில்லியனாக விளங்கின. இவ்வளர்ச்சியானது கைத்தொழில் ஏற்றுமதிகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளினால் முழுமையாக உந்துதலடைந்து காணப்பட்டது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் 12.6 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டன. ஆடைகளிலிருந்தான உயர்ந்தளவிலான ஏற்றுமதி வருவாய்கள் இப் பெறுபேற்றிற்கு பெருமளவில் பங்களித்தன(ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மொத்த ஏற்றுமதிகளின் வளர்ச்சியின் 70.6 சதவீதத்திற்கு வகைகூறியது). சகல முக்கிய சந்தைகளுக்குமான (ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம்) ஆடைகளின் ஏற்றுமதிகள் மேம்பட்டன. அதேவேளை, அநேகமான பிற கைத்தொழில் ஏற்றுமதி வகைகள், குறிப்பாக, இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், விலங்குத்தீன் (முக்கியமாக கோதுமை மீதிகள்), பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் (முக்கியமாக பொறியியல் சாதன பாகங்கள்) மற்றும் இறப்பர் உற்பத்திகள் (முக்கியமாக இறப்பர் டயர்கள்) என்பனவும் மேம்பட்டதொரு செயலாற்றத்தினைக் காண்பித்தன. மாறாக, உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் புடவைகள் (முதன்மையாக பருத்தித் துணிகள்) என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2022 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன. உணவு, குடிபானம் மற்றும் புகையிலையிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு தானியத் தயாரிப்புக்கள் நீங்கலான அநேகமான சகல துணைத்துறைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாயமைந்தது. சராசரி ஏற்றுமதி விலைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்கதோர் அதிகரிப்பிற்கு மத்தியிலும் நீர்க்கலம் மற்றும் வானூர்தி எரிபொருள் என்பவற்றின் குறைந்தளவிலான விநியோகத்தின் காரணமாக பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 ஓகத்தில் 30.2 சதவீத வீழ்ச்சியொன்றினைப் (ஆண்டிற்காண்டு) பதிவுசெய்தன. மேலும், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், பிளாத்திக்கு மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் மற்றும் அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் என்பனவும் ஓரளவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** காய்கறிகள் மற்றும் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் சிறிதளவு அதிகரித்துக் காணப்பட்ட அதேவேளையில் தேயிலை, கடலுணவு (முக்கியமாக புதிய மற்றும் உறைந்த மீன்) மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகள் (முக்கியமாக உண்ணத்தக்க விதைகள், காய்கறி எண்ணெய் மற்றும் எண்ணெய் விதைகள், மற்றும் வெற்றிலை) என்பவற்றிலிருந்தான வருவாய்கள் அதிகரித்ததன் காரணமாக வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் 6.2

[1] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளது.

சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டன. குறைந்தளவுகளுக்கு மத்தியில் (10.4 சதவீத வீழ்ச்சி) உயர்ந்தளவிலான விலைகளினால் (18.9 சதவீத அதிகரிப்பு) உந்தப்பட்டு தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2022 ஓகத்தில் 6.5 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள் (முதன்மையாக தேங்காய்த் துருவல், தென்னந்தும்பு மற்றும் தேங்காய் எண்ணெய்), பதப்படுத்தப்படாத புகையிலை மற்றும் இயற்கை இறப்பர் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** தாது, கசடு மற்றும் சாம்பல் என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தைட்டானிய தாது மற்றும் சிர்கோனிய தாது என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் 21.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்:** ஏற்றுமதி அளவுச் சுட்டெண் மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண் என்பன 2022 ஓகத்தில் முறையே 6.0 சதவீதத்தினாலும் 4.9 சதவீதத்தினாலும் (ஆண்டிற்காண்டு) மேம்பட்டுக் காணப்பட்டன. ஆகவே, ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உயர்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகளினதும் விலைகளினதும் இணைந்த தாக்கம் பங்களித்திருக்கலாம்.

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | ஓகத்து 2021 (ஐ.அ.டொ. மில்) | ஓகத்து 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2021 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **857.4** | **965.3** | **12.6** | **6,094.3** | **7,157.8** | **17.5** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 57.5 | 42.0 | -27.0 | 354.0 | 366.0 | 3.4 |
| விலங்குத்தீன் | 5.5 | 22.6 | 314.4 | 77.5 | 109.2 | 40.9 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 493.3 | 566.9 | 14.9 | 3,434.8 | 4,095.6 | 19.2 |
| இதில் ஆடைகள் | 439.6 | 526.7 | 19.8 | 3,122.6 | 3,773.1 | 20.8 |
| புடவைகள் | 43.3 | 31.7 | -26.7 | 227.5 | 240.9 | 5.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 10.4 | 8.5 | -18.7 | 84.8 | 81.6 | -3.8 |
| இறப்பர் உற்பத்திகள் | 88.6 | 96.6 | 9.0 | 681.7 | 676.3 | -0.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 22.3 | 43.3 | 94.0 | 179.1 | 278.7 | 55.7 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 41.1 | 53.0 | 28.9 | 329.1 | 375.9 | 14.2 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 9.5 | 11.1 | 16.8 | 74.8 | 89.4 | 19.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 46.3 | 32.3 | -30.2 | 294.9 | 409.8 | 39.0 |
| இரசாயன உற்பத்திகள் | 16.7 | 18.2 | 9.3 | 143.7 | 150.8 | 5.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.6 | 11.6 | 9.8 | 82.6 | 95.7 | 15.9 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 6.1 | 5.3 | -14.3 | 35.5 | 37.9 | 6.9 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 5.8 | 8.7 | 48.7 | 33.8 | 54.2 | 60.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.0 | 5.0 | -15.7 | 50.7 | 43.2 | -14.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 15.5 | 13.5 | -13.1 | 100.1 | 120.2 | 20.1 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.1 | 3.9 | 25.6 | 24.7 | 26.0 | 5.1 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 29.5 | 31.3 | 6.0 | 197.4 | 228.8 | 15.9 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **239.4** | **254.2** | **6.2** | **1,765.5** | **1,708.5** | **-3.2** |
| தேயிலை | 116.8 | 124.4 | 6.5 | 882.4 | 819.3 | -7.2 |
| இறப்பர் | 3.7 | 3.2 | -13.0 | 27.3 | 29.4 | 7.9 |
| தேங்காய் | 40.1 | 35.5 | -11.5 | 276.9 | 284.3 | 2.7 |
| வாசனைத்திரவியங்கள் | 39.7 | 40.1 | 1.1 | 282.4 | 233.5 | -17.3 |
| காய்கறிகள் | 2.2 | 3.0 | 34.7 | 18.4 | 17.5 | -4.6 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.6 | 2.0 | -23.9 | 21.4 | 15.7 | -26.8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 15.7 | 20.5 | 30.7 | 91.1 | 120.4 | 32.0 |
| கடலுணவு | 18.6 | 25.5 | 37.1 | 165.5 | 188.4 | 13.8 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **3.1** | **2.5** | **-21.3** | **30.7** | **21.1** | **-31.3** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.0** | **2.4** | **129.2** | **13.6** | **14.8** | **8.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,101.0** | **1,224.4** | **11.2** | **7,904.0** | **8,902.2** | **12.6** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

**வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்**[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிச் செலவினம் 2021 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,687 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் ஐ.அ.டொலர் 1,486 மில்லியனிற்கு 11.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** முதலீட்டுப் பொருட்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் என்பவற்றின் செலவினத்தில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டிருந்த வேளையில், இடைநிலைப் பொருட்கள் மற்றும் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதியில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது. அதேவேளை, ஒன்றுசேர்ந்த அடிப்படையில், இறக்குமதிச் செலவினம் 2022 சனவரி தொடக்கம் ஓகத்து வரையிலான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 12,801 மில்லியனாக விளங்கி 4.6 சதவீத (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இருப்பினும், இறக்குமதிச் செலவினம் 2022 யூனில் குறைந்தளவிலான மட்டத்தினை அண்மித்தமையிலிருந்து மாதத்திற்கு மாத அடிப்படையில் அதிகரித்த போக்கினைக் காண்பிக்கின்றமையானது அத்தியாவசிய இறக்குமதிகளின் நிமித்தம் வெளிநாட்டுச் செலாவணியைப் பாதுகாக்கும் பொருட்டு 2022 ஓகத்தில் அரசாங்கம் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கமாக்குவதற்குத் தூண்டுதலளித்த போதிலும் 2022 செத்தெம்பரில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினத்தில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் உணவல்லா நுகர்வுப் பொருட்களின் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் உந்தப்பட்டு நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் 28.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் (முக்கியமாக தடுப்பு மருந்துகள்), தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் (முக்கியமாக தொலைபேசிகள்) மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் (முக்கியமாக தொலைக்காட்சிகள்) என்பவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் சகல துணைத்துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. மாறாக, தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகள் (முதன்மையாக அரிசி) மற்றும் சீனி என்பவற்றின் அதிகரித்த இறக்குமதிகளினால் கணிசமானளவில் பங்களிக்கப்பட்டு உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 ஓகத்தில் 17.2 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்துக் காணப்பட்டது. இருப்பினும், பாற்பண்ணை உற்பத்திகள் (முக்கியமாக பால்மா), கடலுணவு (முக்கியமாக உலர்ந்த மற்றும் புதிய மீன்), எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள் (முக்கியமாக தேங்காய் எண்ணெய்), காய்கறிகள் (முக்கியமாக பெரிய வெங்காயம்) மற்றும் பழவர்க்கங்கள் என்பன மீதான செலவினம் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

**இடைநிலைப் பொருட்கள்:** எரிபொருள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (முக்கியமாக துணிகள்) மற்றும் வளமாக்கிகள் (முக்கியமாக யூரியா) என்பவற்றினால் முக்கியமாக உந்தப்பட்டு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் 2.6 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. மேலும், இரசாயன உற்பத்திகள்,

[2] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த இறக்குமதிகளின் வகைப்படுத்தல் இணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளது.

வைரங்கள் மற்றும் அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் (முதன்மையாக கைத்தொழில்சார் வைரங்கள்), தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள், மற்றும் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினமும் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்துள்ளன. அதேவேளை, அடிப்படை உலோகம் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு), கோதுமை மற்றும் சோளம், வேளாண்மை உள்ளீடுகள் (முக்கியமாக விலங்குத்தீன்), ஊர்திகள் மற்றும் இயந்திரவியல் பாகங்கள் உள்ளடங்கலான இடைநிலைப் பொருட்களின் ஏனைய பல வகைகள் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பவற்றினை உள்ளடக்கிய எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 ஓகத்தில் ஐ.அ.டொலர் 389 மில்லியனிற்கு 10.2 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்துக் காணப்பட்டதுடன் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் என்பவற்றின் குறைந்தளவிலான இறக்குமதி அளவுகளுக்கு மத்தியில் உயர்ந்தளவிலான சராசரி இறக்குமதி விலைகள் இவ்வதிகரிப்பிற்கு பங்களித்திருந்தன. மசகெண்ணெய்யின் பீப்பாய் ஒன்றிற்கான சராசரி இறக்குமதி விலையானது 2021 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 74.88 உடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் ஐ.அ.டொலர் 114.71 ஆக காணப்பட்டது.

**முதலீட்டுப் பொருட்கள்:** சகல துணைத்துறைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக முதலீட்டுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் 39.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. பொறி மற்றும் சாதனங்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது கணனிகள், அறுவடை இயந்திரங்கள் மற்றும் கடத்திச் சாதனங்கள் என்பன மீதான குறைந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தினால் உந்தப்பட்டிருந்தது. இரும்பு மற்றும் உருக்கு (முதன்மையாக இரும்புக் கம்பி மற்றும் தடி), சீமெந்து மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் என்பவற்றின் குறைந்தளவிலான இறக்குமதிகளின் காரணமாக கட்டடவாக்கப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தது. அதேவேளை, போக்குவரத்துச் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உழவு இயந்திரங்கள் மற்றும் தாங்கிகள், மற்றும் பவுசர்கள் போன்ற வர்த்தக ரீதியிலான ஊர்திகளின் குறைந்தளவிலான இறக்குமதிகள் முக்கியமாகப் பங்களித்தன.

**இறக்குமதிச் சுட்டெண்கள்:** 2022 ஓகத்தில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 23.6 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 15.4 சதவீதத்தினால் அதிகரித்தமையானது 2022 ஓகத்தில் இறக்குமதிச் செலவினத்தின் வீழ்ச்சிக்கு அளவுத் தாக்கத்தினால் உந்தப்பட்டமையே முக்கிய காரணமென்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 8: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 9: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 10: மாதாந்த இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)

| வகை | ஓகத்து 2021 (ஐ.அ.டொ. மில்) | ஓகத்து 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2021 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **324.3** | **231.2** | **-28.7** | **2,579.3** | **1,945.7** | **-24.6** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 119.1 | 139.7 | 17.2 | 1,151.9 | 1,106.2 | -4.0 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.3 | 42.9 | 1,729.4 | 24.4 | 285.4 | 1,069.9 |
| பால் உற்பத்திகள் | 30.6 | 11.6 | -62.2 | 231.2 | 174.5 | -24.5 |
| காய்கறிகள் (ஆ) | 36.1 | 32.9 | -9.1 | 278.7 | 226.2 | -18.9 |
| கடலுணவு | 14.8 | 3.7 | -75.2 | 82.5 | 49.3 | -40.2 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 3.2 | 28.2 | 783.1 | 211.3 | 148.8 | -29.6 |
| வாசனைத்திரவியங்கள் | 9.8 | 11.8 | 21.1 | 90.5 | 93.2 | 2.9 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 22.3 | 8.7 | -61.0 | 233.3 | 128.7 | -44.8 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 205.1 | 91.5 | -55.4 | 1,427.3 | 839.4 | -41.2 |
| தனியாள் ஊர்திகள் | 1.1 | 0.8 | -23.5 | 7.8 | 5.7 | -26.5 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 98.5 | 46.5 | -52.8 | 532.0 | 347.5 | -34.7 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 16.5 | 5.6 | -66.1 | 179.8 | 71.3 | -60.3 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 18.5 | 13.7 | -26.2 | 138.7 | 158.6 | 14.4 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 32.8 | 1.3 | -96.1 | 283.1 | 49.9 | -82.4 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 13.4 | 7.8 | -41.6 | 103.6 | 86.9 | -16.1 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 24.3 | 15.9 | -34.7 | 182.4 | 119.7 | -34.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,010.0** | **1,036.5** | **2.6** | **7,942.4** | **8,584.0** | **8.1** |
| எரிபொருள் | 352.7 | 388.6 | 10.2 | 2,395.9 | 3,317.9 | 38.5 |
| இதில் மசகெண்ணெய் | 107.7 | 82.2 | -23.6 | 516.4 | 257.3 | -50.2 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 245.0 | 306.3 | 25.0 | 1,748.3 | 2,796.0 | 59.9 |
| நிலக்கரி | … | 0.1 | 161.6 | 131.2 | 264.6 | 101.7 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 6.8 | 17.0 | 150.3 | 81.7 | 133.7 | 63.6 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 241.3 | 269.7 | 11.8 | 1,943.7 | 2,175.7 | 11.9 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 37.5 | 40.4 | 7.8 | 319.4 | 325.5 | 1.9 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 25.0 | 15.1 | -39.9 | 187.3 | 148.3 | -20.8 |
| கோதுமை மற்றும் சோளம் | 55.0 | 29.9 | -45.6 | 265.9 | 170.3 | -36.0 |
| அடிப்படை உலோகங்கள் | 39.6 | 12.7 | -67.9 | 499.2 | 270.0 | -45.9 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 54.5 | 53.8 | -1.3 | 518.6 | 464.9 | -10.4 |
| இரசாயன உற்பத்திகள் | 80.1 | 92.7 | 15.8 | 732.6 | 682.1 | -6.9 |
| வளமாக்கி | 0.9 | 19.9 | 2,036.7 | 104.0 | 98.2 | -5.5 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 35.4 | 36.9 | 4.1 | 265.8 | 257.6 | -3.1 |
| கனிம உற்பத்திகள் | 17.7 | 11.1 | -37.2 | 106.1 | 102.4 | -3.4 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 63.6 | 48.7 | -23.4 | 522.4 | 437.5 | -16.2 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **351.7** | **212.6** | **-39.5** | **2,882.3** | **2,263.5** | **-21.5** |
| பொறி மற்றும் கருவிகள் | 224.0 | 136.1 | -39.2 | 1,822.5 | 1,462.4 | -19.8 |
| கட்டடப் பொருட்கள் | 97.5 | 70.3 | -28.0 | 803.9 | 689.2 | -14.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 29.6 | 6.0 | -79.6 | 252.1 | 109.2 | -56.7 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.5 | 0.2 | -64.2 | 3.7 | 2.7 | -27.8 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.8** | **5.5** | **638.3** | **7.6** | **7.7** | **2.2** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,686.7** | **1,485.9** | **-11.9** | **13,411.5** | **12,800.9** | **-4.6** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,334.0** | **1,097.3** | **-17.7** | **11,015.6** | **9,483.0** | **-13.9** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது
… புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** தொழிலாளர் பணவனுப்பல்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 279 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்தில் ஐ.அ.டொலர் 325 மில்லியனிற்கு அதிகரித்துக் காணப்பட்டதுடன் 2022இன் இதுவரையிலான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்தளவிலான மாதாந்த பணவனுப்பல்களாகக் காணப்பட்டன. அதேவேளை, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 2022 ஓகத்து மாத காலப்பகுதியில் 29,072ஆக பதிவுசெய்யப்பட்டிருந்தன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் தேர்ச்சியற்ற (9,685), தேர்ச்சிபெற்ற (8,590) மற்றும் வீட்டுப்பணிப் பெண்கள் (7,176) ஆகிய வகைகளை உள்ளடக்கியுள்ளன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் முன்னைய ஆண்டின் சனவரி தொடக்கம் ஓகத்து வரையிலான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 45,899 புறப்படுகைகளுடனும் 2021 ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 117,952 புறப்படுகைகளுடனும் ஒப்பிடுகையில் 2022இன் தொடர்புடைய காலப்பகுதியில் 192,594ஆக பதிவுசெய்யப்பட்டிருந்தன.

**சுற்றுலாப் பயணிகள்:** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2022 யூலையில் பதிவுசெய்யப்பட்ட 47,293 வருகைகளிலிருந்து 2022 ஓகத்தில் 37,760இற்கு மிதமடைந்து காணப்பட்டன. 2022 ஓகத்து காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் பிரான்சு என்பன காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 85 மில்லியனுடனும் முன்னைய ஆண்டின் ஓகத்து மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 13 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2022இன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 68 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபடம் 11: மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 12: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2022 ஓகத்தில் சிறியளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த போதிலும் 2022 சனவரி தொடக்கம் ஓகத்து வரையிலான காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தைக்கு ஐ.அ.டொலர் 6 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சலொன்றினைத் தோற்றுவித்தது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2022 ஓகத்தில் சிறியளவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது 2022 ஓகத்து முடிவடைகின்ற எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 97 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2022 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 1.7 பில்லியனாக விளங்கின. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.4 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளுக்கான உட்பாய்ச்சல்களைப் பயன்படுத்தி அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிக்கும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையை மத்திய வங்கி தொடர்ந்தும் நிரம்பல் செய்தது. இதன் விளைவாக 2022 ஓகத்து இறுதியளவில் திரவ ஒதுக்கு மட்டம் குறிப்பிடத்தக்களவிலான தாழ்ந்த மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2022 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனாக காணப்பட்டன.

**வரைபடம் 13: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**2022 மே மாத நடுப்பகுதியில் நாளாந்த அனுமதிக்கத்தக்க வீச்சின் அறிமுகத்தினைத் தொடர்ந்து 2022 ஓகத்து முழுவதும் செலாவணி வீதம் தொடர்ந்தும் நிலையாகக் காணப்பட்டது.** இதற்கமைய, 2022 மே 13இலிருந்து இதுவரையான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக சிறியளவிலான தேய்வொன்றினைப் பதிவுசெய்திருந்த போதிலும் 2022 ஒத்தோபர் 06 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 44.8 சதவீத தேய்வொன்றினைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2022 ஒத்தோபர் 06 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பவற்றிற்கெதிராக தேய்வடைந்துள்ளது. வங்கிகளுக்கிடையிலான உடனடிச் சந்தையில் காணப்பட்ட ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான கொடுக்கல்வாங்கல்கள் காரணமாக 2022 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து சராசரி நிறையேற்றப்பட்ட உடனடிச் செலாவணி வீதமானது மாற்றமின்றிக் காணப்பட்டது.

**வரைபடம் 14: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2020 | 2021 | 2022 (ஒத்தோபர் 06 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.6% | -7.0% | -44.8% |
| யூரோ | -11.2% | +1.1% | -36.9% |
| ஸ்ரேலிங் பவுன் | -6.2% | -6.0% | -34.3% |
| யப்பானிய யென் | -7.5% | +3.8% | -30.6% |
| அவுஸ்திரேலிய டொலர் | -11.4% | -1.2% | -38.6% |
| இந்திய ரூபா | 0.0% | -5.5% | -39.4% |

*தேய்வு(-)/உயர்வு(+)

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு I:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | ஓகத்து 2021 (ஐ.அ.டொ. மில்) | ஓகத்து 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2021 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **241.4** | **268.8** | **11.3** | **1,795.6** | **1,786.5** | **-0.5** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 20.6 | 27.9 | 35.2 | 191.7 | 211.0 | 10.0 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 5.2 | 4.2 | -19.9 | 44.2 | 50.7 | 14.9 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 46.7 | 43.6 | -6.6 | 299.1 | 312.0 | 4.3 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 152.6 | 161.7 | 6.0 | 1,138.7 | 1,039.7 | -8.7 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **14.6** | **11.4** | **-21.6** | **89.9** | **93.4** | **3.9** |
| 11 குடிபானங்கள் | 3.4 | 4.1 | 20.5 | 20.4 | 33.3 | 63.4 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 11.2 | 7.4 | -34.4 | 69.6 | 60.2 | -13.5 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **37.6** | **36.4** | **-3.2** | **284.5** | **303.7** | **6.8** |
| 23 மசகு இறப்பர் | 3.8 | 3.3 | -12.9 | 28.0 | 30.2 | 8.1 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 21.3 | 18.4 | -13.4 | 160.4 | 162.5 | 1.3 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **46.3** | **32.3** | **-30.2** | **294.9** | **409.8** | **39.0** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 40.0 | 32.3 | -19.2 | 258.0 | 394.0 | 52.7 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 6.3 | - | - | 36.9 | 15.9 | -56.9 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **13.7** | **8.0** | **-42.0** | **83.0** | **68.9** | **-17.1** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 7.7 | 6.7 | -12.9 | 54.7 | 55.5 | 1.5 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **23.9** | **23.3** | **-2.2** | **187.8** | **184.5** | **-1.7** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **157.2** | **175.5** | **11.6** | **1,096.3** | **1,261.8** | **15.1** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 56.9 | 67.8 | 19.1 | 439.3 | 472.0 | 7.4 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 52.0 | 39.5 | -24.0 | 297.6 | 307.9 | 3.5 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 27.8 | 48.8 | 76.0 | 217.3 | 320.2 | 47.3 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **48.6** | **62.0** | **27.5** | **392.8** | **452.7** | **15.2** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 27.0 | 31.2 | 15.8 | 212.7 | 236.3 | 11.1 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **517.7** | **606.6** | **17.2** | **3,678.9** | **4,340.0** | **18.0** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 475.3 | 561.0 | 18.0 | 3,388.9 | 4,007.7 | 18.3 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **-** | **…** | **-** | **0.3** | **0.8** | **144.0** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,101.0** | **1,224.4** | **11.2** | **7,904.0** | **8,902.2** | **12.6** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை
… புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

## இணைப்பு II:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | ஓகத்து 2021 (ஐ.அ.டொ. மில்) | ஓகத்து 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஓகத் 2021 (ஐ.அ.டொ. மில்) | சன-ஓகத் 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **194.2** | **190.8** | **-1.8** | **1,534.0** | **1,446.6** | **-5.7** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 30.7 | 11.6 | -62.3 | 231.5 | 174.9 | -24.5 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 14.9 | 3.8 | -74.7 | 83.2 | 50.2 | -39.7 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 57.5 | 72.3 | 25.8 | 288.6 | 452.2 | 56.7 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 40.5 | 34.0 | -16.1 | 324.0 | 260.0 | -19.8 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 3.2 | 28.2 | 783.0 | 211.3 | 148.8 | -29.6 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 12.2 | 15.2 | 24.2 | 117.1 | 122.1 | 4.3 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **9.8** | **6.6** | **-33.1** | **51.0** | **65.3** | **28.0** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **47.1** | **47.0** | **-0.2** | **380.5** | **347.0** | **-8.8** |
| 23 மசகு இறப்பர் | 31.0 | 32.8 | 5.8 | 233.8 | 220.0 | -5.9 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 1.1 | 4.1 | 263.1 | 14.5 | 18.9 | 30.1 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **352.7** | **388.6** | **10.2** | **2,395.9** | **3,317.9** | **38.5** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 306.1 | 363.1 | 18.6 | 2,030.6 | 2,892.8 | 42.5 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 46.5 | 25.4 | -45.3 | 234.1 | 160.4 | -31.4 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **17.6** | **2.7** | **-84.7** | **211.3** | **62.0** | **-70.6** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 15.7 | 2.0 | -87.3 | 194.1 | 51.0 | -73.7 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **229.7** | **207.6** | **-9.6** | **1,860.4** | **1,571.0** | **-15.6** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 93.2 | 43.9 | -52.9 | 491.2 | 326.3 | -33.6 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 0.9 | 19.8 | 2,128.8 | 103.5 | 98.1 | -5.2 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 38.9 | 32.3 | -17.0 | 382.0 | 321.8 | -15.8 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 12.8 | 16.6 | 29.6 | 112.0 | 117.4 | 4.8 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **448.2** | **420.8** | **-6.1** | **3,787.3** | **3,707.1** | **-2.1** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 35.9 | 38.3 | 6.5 | 305.5 | 305.3 | -0.1 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 238.6 | 261.2 | 9.5 | 1,907.5 | 2,131.6 | 11.8 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 43.1 | 39.0 | -9.4 | 337.0 | 352.5 | 4.6 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 55.3 | 19.0 | -65.6 | 612.5 | 374.8 | -38.8 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **304.0** | **152.3** | **-49.9** | **2,563.1** | **1,713.8** | **-33.1** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 51.6 | 19.7 | -61.8 | 435.5 | 306.9 | -29.5 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 49.6 | 28.8 | -42.0 | 413.8 | 332.9 | -19.5 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 32.8 | 10.6 | -67.7 | 218.7 | 123.6 | -43.5 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 55.4 | 9.3 | -83.3 | 543.6 | 170.6 | -68.6 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 62.6 | 51.8 | -17.4 | 485.5 | 460.0 | -5.2 |
| 78 வீதி ஊர்திகளி | 23.9 | 13.1 | -45.0 | 239.0 | 121.4 | -49.2 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **82.6** | **64.0** | **-22.5** | **619.3** | **560.8** | **-9.5** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 15.9 | 12.7 | -19.6 | 117.2 | 138.9 | 18.5 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 21.2 | 10.5 | -50.5 | 157.3 | 103.2 | -34.4 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.8** | **5.5** | **629.8** | **8.7** | **9.1** | **4.7** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,686.7** | **1,485.9** | **-11.9** | **13,411.5** | **12,800.9** | **-4.6** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf